முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 09.01.2026 , அ.வ.எண்.33/2013 ,வா.சா.3 ஆனந்தகுமார் த/பெ.வெள்ளியங்கிரி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1.பார்வதி அம்மாள் எனக்கு என்ன உறவு என்றால் எனது நண்பரின் பாட்டி ஆவார். பார்வதி அம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று நான் எனது பிரமாண கூறியுள்ள நிலையில் அவருக்கு எங்கெங்கு சொத்துக்கள் உள்ளது என்று என்னால் கூற முடியுமா என்றால் செடிமுத்தூர் மற்றும் ஆனைமலையில் சொத்துக்கள் உள்ளது. எந்த ஊரில் சொத்தை பொறுத்து பார்வதி அம்மாள் உயில் எழுதி கொடுத்தார் என்றால் அனைத்து சொத்துக்களையும் உயில் எழுதி கொடுத்தார். பத்திரம் எழுதிய பத்திர எழுத்தரின் பெயர் தெரியுமா என்றால் கண்ணன் ஆவார். மேற்படி உயிலானது எந்த பத்திர அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் ஆனைமலை பத்திர அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது.

2.ஆனைமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் எந்த திசையில் பத்திர எழுத்தர் அலுவலகம் உள்ளது என்றால் பொள்ளாச்சியில் உள்ளது. மேற்படி ஆவணத்தை தயார் செய்வதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு சென்றோம் என்றால் இரண்டு நாட்களுக்கு முன்பு சென்றோம். யார் யார் சென்றோம் என்றால் நான், பாலாஜி அருண்குமார், பார்வதி அம்மாள் சென்றோம். அந்த சமயத்தில் பார்வதி அம்மாள் எந்த ஆவணமும் பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு கொண்டு வரவில்லை என்றால் சரிதான். உயிலானது எத்தனை ரூபாய் முத்திரை தாளில் செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி உயிலில் மற்றொரு சாட்சி யார் என்று தெரியுமா என்றால் பாலாஜி அருண்குமார் ஆவார்.

3.மேற்படி உயிலில் என்னுடைய கையெழுத்து முதலில் உள்ளது என்றால் இரண்டாவது சாட்சி கையெழுத்து ஆகும். மற்றொரு சாட்சியான பாலாஜி அருண்குமார் உயிருடன் தான் உள்ளார் என்றால் சரிதான். பார்வதி அம்மாள் ஆங்கிலத்தில் கையொப்பம் அல்லது தமிழில் கையெழுத்து செய்தார்களா என்று எனக்கு தெரியாது

ஒப்பம்/—( R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

என்றால் அவருடைய initial–ஐ ஆங்கிலத்திலும் பெயரை தமிழிலும் கையொப்பம் செய்தார். பார்வதி அம்மாள் எத்தனை கையெழுத்து போட்டார் என்று எனக்கு தெரியாது என்றால் எல்லா பக்கத்திலும் கையெழுத்து செய்தார்.

4.பார்வதி அம்மமாள் எனது நண்பரின் பாட்டி என்பதால் ஆனைமலை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேற்படி உயில் தயார் செய்யப்பட்டது என்பதும் பொய் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிப்பதால்தான் உயிலானது எத்தனை ரூபாய் முத்திரை தாளில் தயார் செய்யப்பட்டது என்று ஞாபகம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. பார்வதி அம்மாள் எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–( R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி